# பன்னோக்குப் பார்வையில் தமிழ் இலக்கியங்கள்

(தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

## தொகுதி – 1

இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம் – 629 802.

## தேசியக் கருத்தரங்கம்

ஏப்ரல் 28, 2023

பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.இளமாறன்

முனைவர் தா.மஞ்சுஷா

முனைவர் கி.பாரத்

NCBH

Scanned with OKEN Scanner

# பொருளடக்கம்


1. பௌத்த பன்னிரு சார்புகளில் வள்ளுவரின் இன்னா செய்யாமை
முனைவர் க.அகல்யா 17

2. கலிங்கத்துப்பரணியில் மன்னர்களுக்கும் உலக உயிர்களுக்குமான உறவு
ந.அகிலா, முனைவர் த.மகிலா ஜெனி 24

3. ஐங்குறுநூறு பாலைத் திணையில் தாவரங்கள்
பெ.அடைக்காத்தான் 31

4. தேம்பாவணி கூறும் அறம்
தே.அந்தோணி ஜோசப் ஸ்டாலின்,
முனைவர் ஆ.பாப்பாத்தி 37

5. சோழனுலாவில் இராசராசனின் சிறப்புகள்
செ.வ.அபிஷா, முனைவர் பா.இங்கிரீட் போலின் 46

6. சீவக சிந்தாமணி காட்டும் சமுதாயப் பின்புலம்
அபிஷா.பி.க, முனைவர் ரா.சுபஜா 51

7. பழங்காலப் பெண் கலைஞர்கள்
முனைவர் சி.அமுதா 57

8. சேரன் கவிதைகளில் நிலத்தின் மீதான அந்நியர் பதிவுகள்
த.அமுல்பிரியா, முனைவர் பொ.திராவிடமணி 62

9. சங்க இலக்கிய மருத நிலத்தின் மக்களினங்கள்
ஞா.அருணாமேரி முனைவர் ஹா.கபி 68

10. பாரதியாரின் தேசிய கீதங்களில் தேசிய ஒருமைப்பாடு
முனைவர் மா.தே.அருண்மொழி நங்கை 72

11. சங்க கால பெண்பாற் புலவர் வெண்ணிக் குயத்தியாரின் ஆளுமையும் பெண்ணியமும்
முனைவர் து.அருண்பாண்டியன் 78

12. விதைபோல் விழுந்தவன் - அப்துல்ரகுமான்
முனைவர் மு.அலிபிநிஷா 84


Scanned with OKEN Scanner

# பாரதியாரின் தேசிய கீதங்களில் தேசிய ஒருமைப்பாடு

முனைவர் மா.தே.அருள் மொழி நங்கை
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
ஜோசவிசிராஸ் கல்லூரி
நாகர்கோவில்-1

ஆய்வுச் சுருக்கம்

பாட்டுக்கொரு புலவன் பாரதி. 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் நாள் தோன்றினார். தன்னுடைய 11 வது வயதிலேயே பாரதி (கலைமகள்) என்னும் பட்டத்தை பெற்றார். 1897 ஆம் ஆண்டு அவருக்கு திருமணம் நடைபெற்றது. இளம் வயதிலேயே பெற்றோரை இழந்தார். அவர் காசியில் உள்ள அத்தையின் ஆதரவில் படித்தார். அவர் காலத்தில் நடந்த விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். புதுச்சேரியில் குடியேறினார். அங்கு தான் தன்னுடைய பெரும்பான்மையான கவிதைகளைப் பாடினார். 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதினொன்றாம் நாள் சென்னையில் காலமானார். பாரதியாரின் தேசிய கீதங்களில் காணப்படும் தேசிய ஒருமைப்பாடு பற்றி இக்கட்டுரையில் காணலாம். மனிதர்கள் ஜாதி மதம் என்று பாகுபாடு பார்த்து பிரிந்திருக்கும் அவலத்தை பாரதியார் கண்டிக்கின்றார் மனிதர்கள் அனைவரும் ஒன்றே. அவர்களுக்குள் வேற்றுமை காண்பது நல்லதன்று. அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். ஒற்றுமையினால் உயர்வு ஏற்படும் என்பதை நாட்டு மக்களிடம் பரப்பும் விதமாக இப்பாடல்களைப் பாடியுள்ளார்.

"தொழுதுனை வாழ்த்தி வணங்குவதற்கு இங்கு உன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்" (தே.கீ.19)

பாரதமாதாவை நாட்டு மக்கள் அனைவரும் வாழ்த்தி வணங்க வேண்டுமென்று விரும்புகின்றார். தாய் நாட்டுக்கொடுக்கும் புனிதத் தன்மை உண்டு. அதிலும் சமய ஒற்றுமையை வலியுறுத்துகின்றார். இவ்வாறு அவருடைய தேசிய ஒருமைப்பாட்டு சிந்தனையை கட்டுரையில் ஆய்வு நோக்கில் எழுதியுள்ளேன்.

Scanned with OKEN Scanner

## முன்னுரை

பாரதியார் பல்வேறு கோணங்களில் நாட்டுச் சூழலுக்கு ஏற்றவாறு தன்னுடைய பாடல்களை பாடியுள்ளார். இக்கட்டுரையில் தேசிய கீதங்கள் பாடல்களில் எவ்வாறு தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தியுள்ளார் என்பதை ஆய்வு செய்யலாம். பழமைக்கும் புதுமைக்கும் உயர்வுக்கும் தாழ்வுக்கும் வேற்றுமைக்கும் ஒற்றுமைக்கும் இடையே என்னென்ன வேறுபாடுகள் உள்ளன என்பதை தன் படைப்பாற்றலால் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கப் போராடுகின்றார் பாரதியார்.

## மனிதருள் வேற்றுமை

குறைகள் களைய வேண்டுமெனின் நிறைகள் அதிகரிக்க வேண்டும். தீயன அகல வேண்டுமாயின் நல்லவை தோன்ற வேண்டும். மனிதருள் வேற்றுமை ஒழிந்தால் தான் ஒற்றுமை உருவாகும். பாரதியார் காலகட்டத்தில் நமது நாடு ஜாதி மத கட்டுக்குள் மூழ்கி கிடந்ததால் "ஜாதி மதங்களை பாரோம்" என்று பாடுகின்றார். வேதியராக இருப்பினும் வேறு குலத்தவராக இருப்பினும் எல்லாரும் ஒரே குலத்தைச் சார்ந்தவர்களே என்கிறார். மக்கள் தொழிலால் வேறுபட்டனரே தவிர வேறில்லை என்பதை மனதில் வைத்து எல்லா சாதியினரையும் ஒன்றுபடுத்தி ஒரே குடும்பமாக சித்தரிக்கின்றார் பாரதியார்.

'நான்கு வகுப்பும் இங்கொன்றே- இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலைதவறிச் சிதைந்தே-செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி' (பல்வகைப்பாடல்கள் 3:4வரி)

என்று அழைக்கின்றார்.

தாழ்த்தப்பட்டவர்கள் என வெறுத்து ஒதுக்கினாலும் அவர்கள் சீனர்களைப் போன்றும் பிற நாட்டினரை போன்றும் நமது நாட்டிற்கு தீமை செய்ய மாட்டார்கள் என்கின்றார். சீனர்கள் என்று அவர் தனித்துவமாக குறிப்பிட்டதற்கு ஏற்ப அவர்கள் நம் நாட்டை தொடர்ந்து அக்கிரமித்து வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

'அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் பாம்வணங்கும் கடவுளாரே'

(மங்கநிதி-தாண்டகம்)

இவ்வாறு திருநாவுக்கரசரும் புலையரைக் கடவுளாகவே மதித்துள்ளார். இதற்கேற்ப பாரதியாரும் தாழ்த்தப்பட்டவர் என்று எவருமில்லை. அவர்களும் நம்முடன் ஒன்றுபட்டவர்களே என்று போற்றுகின்றார். பாரதியார் புதுச்சேரியில் வாழும்போது அரிஜனர் ஒருவரைத் தம் உறவினர் போல அன்பு கொண்டார் என்று மு வரதராசன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பாரதிதாசனார்

"தேசத்தார் நல்லுணர்வு பெறும் பொருட்டு
சேரியிலே நாள் முழுதும் தங்கியுண்டார்"

என்று பாரதியாரை போற்றியுள்ளார். ஒரு நாட்டின் ஓரினம் மற்றும் வளர்வதால் நாட்டு மக்களும் நாட்டின் வளர்ச்சியும் மேம்படாது என சர்தார் வல்லபாய் பட்டேல் கூறிய கருத்து சிந்திக்கத்தக்கது. நாடு வளர தடையாக இருப்பது சாதி வேற்றுமை என்பதை பாரதியார் உணர்கின்றார். அதனால்

"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ் மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்" (தே.கீ.5)

இவ்வாறு பாடுகின்றார்.

ஒரு நாடு அதனுடைய அரசியல், இயற்கை, பொருளாதாரம் ஆகியவற்றைப் பொறுத்து நாட்டின் வேற்றுமையும் ஒற்றுமையும் இருக்கும். இதை உணர்ந்த பாரதியார்

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி - ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்-தம்முள்
சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ" (தே.கீ.1)

இவ்வாறு நம் நாட்டு மக்கள் எல்லாரையும் ஒன்றுபடுத்தி பாடுகின்றார். மனிதர்கள் அனைவரும் சமம். சாதியின் பெயரால் அவர்களை வேறுபடுத்துவதை பாரதியார் விரும்பவில்லை. சாதி வேற்றுமைகளை வேரோடு பிடுங்கி எறியவே ஆசைப்படுகின்றார்.

ஒற்றுமையால் ஏற்படும் உயர்வு

'எம்மதமும் சம்மதம்' என்பது ஆன்றோர் வாக்கு அதற்கேற்ப பாரதியார்

"ஒன்று பரம்பொருள்" (தே.கீ.8)

என்று பாடுகின்றார். இவ்வாறு சமயத்தைக் கடந்து ஒருமைப்பாடு நிலவ வேண்டுமென்று விரும்புகின்றார். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை பெறலாம்' என்னும் கோட்பாட்டிற்கு இணங்க தேசிய கீதத்தில்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்" (தே.கீ.:1)

என்று பாடுகின்றார்.

நாட்டின் வளர்ச்சியோ தாழ்ச்சியோ எத்தகைய நிலை ஏற்பட்டாலும் அந்த நிலை நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். இதனை,

"எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவரக்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடியும் வீழ்வோம்" (தே.கீ.:1)

மேலும்

"ஒன்றாய் நின்றினி வென்றா யினுமுயிர்
சென்றாயினும் வலி குன்றாது
வந்தே மாதரம் என்று ஒதுவோம்" (தே.கீ.:2)

என்று ஒருமைப்பாட்டினை வலியுறுத்தியுள்ளார்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே" (தே.கீ.:3)

இப்பாடலில் நமது முன்னோர்களின் இன்ப உணர்வுகளை எடுத்துரைக்கின்றார். அதன் வாயிலாக நமது சமுதாயத்தை அவர்களின் எண்ண ஓட்டங்களில் இணையச் செய்கின்றார்.

பாரதியார் இனம் சமயம் மொழி ஆகியவற்றைக் கடந்து ஒருமைப்பாட்டிற்கு வழி தேடுகின்றார். இதற்கேற்ப

"பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்" (தே.கீ.:5)

என்று பாடியுள்ளார். இந்தப் பாடல் தொழில் வாணிபம் முதலிய பலவகை துறைகளின் வழியாக ஒருமைப்பாட்டினை வளர்க்கின்றது.

"சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்து
தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்"

இவ்வாறு பல்வேறு மாநிலத்தவர்களையும் மொழியினரையும் ஒருங்கிணைத்து அருமையாகப் பாடியுள்ளார்.

Scanned with OKEN Scanner

தாய்நாட்டின் தேசியக்கொடி பட்டொளி வீசி நம் தாய்நாட்டின் புகழைப் பரவச் செய்கிறது. அக்கொடிக்கு வணக்கம் செலுத்துவதற்கு ஏராளமான மக்கள் கூட்டம் கை கூப்பி நிற்கின்றனர் என்ற அருமையான காட்சியை கண்முன் நிப்பாட்டுகின்றார்.

"இந்திரன் வச்சிரம் ஓர்பால் - அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்
மந்திரம் நடுவுறத் தோன்றும் - அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானேர்" (தே. கீ.:14)

இவ்வாறு தேசிய கொடியின் சிறப்பினைப் பாடுகின்றார். நம்முடைய தேசிய கொடியில் ஒரு புறம் இந்திரனுடைய வச்சிராயுதம் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொருபுறம் துருக்கரின் புனிதச் சின்னமாகிய இளம்பிறை பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றின் நடுவில் வந்தே மாதரம் என்ற நம் பாரதத் தாயின் மந்திரம் பொறிக்கப் பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்றார். இதில் சமயம் கடந்த ஒருமைப்பாட்டு உணர்வை காண முடிகிறது.

அவருடைய காலத்தில் வாழ்ந்த முப்பது கோடி மக்களையும் ஒன்றாக இணைத்துக் காட்டி ஒருமைப்பாட்டினை வலியுறுத்த எண்ணுகின்றார் பாரதியார்.

"முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் - எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்" (தே.கீ.:9)

என்று பாடுகின்றார். இதில் நம் பாரத அன்னை முப்பது கோடி முகத்தினை உடையவளாக இருந்தாலும் அவள் வலிமையுடைய ஒரே உயிர். அவள் பதினெட்டு வேறு மொழிகளைப் பேசினாலும் அவளுடைய சிந்தனை ஒன்றுதான். இவ்வாறு ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் பான்மை எல்லார் உணர்வுகளையும் செம்மைப்படுத்தும்.

உறங்கிக் கொண்டிருக்கும் பாரதத்தாயை எழுப்பச் சென்ற மக்கள்,

"தொழுதுனை வாழ்த்தி வணங்குவதற்கு இங்குன்
தொண்டர் பல்லாயிரம் சூழ்ந்து நிற்கின்றோம்" (தே.கீ.11)

இவ்வாறு முறையிடும் காட்சி ஒற்றுமைக்கு வழிகாட்டியாக நிற்கின்றது.

பாரதியார் எல்லாரையும் ஒரே குலமாகவும், இந்திய நாட்டு மக்களாகவும், நாட்டின் மன்னராகவும் எண்ணி தேசிய ஒருமைப்பாட்டுக் கொடியைப் பறக்க விடுகின்றார்.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு" (தே.கீ.:25)

என்று தாய் மொழியை வாழ்த்தி நாட்டின் எல்லை வரை ஒற்றுமை ஏற்பட விழைகின்றார். இவ்வாறு

"............கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்" (தே. கீ. :22)

என்று புலவர் மூவரையும் சமமாக காண்கின்றார். இதைப் போன்று

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" (தே. கீ. :20)

என்று வள்ளுவனைப் புகழ்கின்றார். ஒருமைப்பாடு என்ற சிந்தனையை மக்கள் மனதில் விதைக்க அரும்பாடுபட்டவர் பாரதியார்.

## முடிவுரை

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலக ஒருமைப்பாட்டை வலியுறுத்தியவர் கணியன் பூங்குன்றனர். இத்தகைய ஒருமைப்பாட்டு சிந்தனையுடன் வளர்ந்தவர் பாரதியார். அதன் வழியே தேசிய கீதம் பாடல்களில் ஒருமைப்பாட்டை ஆழமாக வலியுறுத்துகின்றார். நாடும் நாட்டு மக்களும் ஒற்றுமையாக ஒரே எண்ணங்களுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதே பாரதியாரின் விருப்பம். அவரின் விருப்பத்தை நாம் தொடர்ந்து பின்பற்றி நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்ப்போம்.

## துணைநூற்பட்டியல்


1. பாரதியின் தம்பி, விசுவநாதன் க., ப.41., 1969, வானதி பதிப்பகம், தி.நகர்,சென்னை-17.
2. எங்கள் கவி பாரதி, ம.பொ.சிவஞானம், ப.7.,1955, இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-4.
3. தமிழ் இலக்கிய வரலாறு, மு.வரதராசன், ப.324, 1972, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி.

# பன்னோக்குப் பார்வையில் தமிழ் இலக்கியங்கள்

(தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

## தொகுதி – 1

**இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
நெய்யூர், கன்னியாகுமரி மாவட்டம் - 629 802.

## தேசியக் கருத்தரங்கம்

ஏப்ரல் 28, 2023

Scan Me

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-81-2344-455-0
Code No. A 4809 ₹ 400/-

Scanned with OKEN Scanner